# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(with UGC 2(f) & 12 (B)Status and NAAC Accredited with "A" Grade in 1st Cycle)
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Karapakkam , Chennai - 600 097.
Phone: 044 - 28389040 Website: www.tnteu.ac.in


No.TNTEU/COE/Circular/2025/ ௬௨௨ Date: 29.08.2025

**Prof.P.Ganesan,Ph.D**
**CONTROLLER OF EXAMINATIONS i/c** **WEB POST**

பெறுநர்

முதல்வர்கள் / நிர்வாகிகள்
அனைத்து இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீா,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள் 2024-2025-ஆம் கல்வியாண்டில் பி.எட். சேர்ந்த மாணாக்கர்கள் இரண்டாமாண்டில் மூன்றாம் பருவம் – கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு செல்வதற்கு உரிய பள்ளிகளை தமிழக அரசின் உயர்கல்வி / பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஒதுக்கப்பட்டுள்ளது – மாணாக்கர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட கல்லூரிகளிலிருந்து பெறுதல் மற்றும் கற்றல், கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை: 1. பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 038390/வி2/இ1/2024, நாள்: 01.07.2025.
2. TNTEU/COE/Circular/2025/ 596 நாள்: 29.08.2025

******

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பி.எட். பட்டப்படிப்பிற்கான பாடத் திட்டத்தின் படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பி.எட். இரண்டாமாண்டு மூன்றாம் பருவம் பயிலும் மாணவ மாணவிகள் 16-வாரம் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை அரசு / அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, 2024-2025-ம் கல்வியாண்டில் பி.எட். சேர்ந்த இரண்டாம் ஆண்டு மூன்றாம் பருவத்தில் பயிலும் மாணாக்கர்கள் எந்த பள்ளியில் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாக நிர்ணயித்த பள்ளிகளின் விவரங்கள் கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. எனவே மாணாக்கர்களின் முழுமையான விவரங்களை (Trainee Details to be filled by College) ஏற்கனவே பல்கலைக்கழகத்தால் அனுப்பப்பட்ட (Excel Format)-ல் பூர்த்தி செய்து <u>03.09.2025</u> தேதிக்குள், தங்கள் கல்லூரியின் College Login வாயிலாக UPLOAD செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

2024-2025-ஆம் கல்வியாண்டில் பி.எட் சேர்ந்த மாணாக்கர்கள் கற்றல் கற்பித்தல் பயிற்சியினை 2025-ம் ஆண்டு செப்டம்பர் 2–ம் வாரம் முதல் மேற்கொள்ளுமாறு இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளும் மாணாக்கர்கள் மற்றும் பள்ளிகளின் விவரங்களை (Trainee Details to be filled by College) பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட Excel Format-ல் <u>03.09.2025</u> தேதிக்குள் கல்லூரிகளிருந்து பெறப்படும் மாணாக்கர்கள் மட்டுமே 2025-ம் ஆண்டு செப்டம்பர் 2–ம் வாரத்திலிருந்து கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள இயலும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

Sd/- K. Rajan 28/8/25

**CONTROLLER OF EXAMINATIONS i/c**